10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 270 ஞாயிற்றுக்கிழமை 18 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 48



## மகிந்தவை எதிர்க்கட்சி தலைவராக்குங்கள்

கொழும்பு, பெப்.18,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை எதிர்க் கட்சியாகவும் மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அமைப்பும் இணைந்த கூட்டணி நாட்டை ஆட்சி செய்வதையே மக்கள் விரும்புகின்றனர்" எனக் கூறிய அவர், 'உள்

06▶

# அழுத்துங்கள் அரசை



### சர்வதேச நாடுகளிடம் சுமந்திரன் கோரிக்கை

ஜெனிவா, பெப்ரவரி, 18

"தேர்தல் முடிவுகளால் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களைக் காரணம் காட்டி, ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்க சர்வதேசம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. மாறாக அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்" என ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் சுமந்திரன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

06▶

## தெறிக்கிறார் சஜித் பறக்கிறார் தயா



கொழும்பு, பெப்.18,

2020 இல் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை ஏற்குமாறும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ரணில் விக்கிரமசிங்க கேட்டிருந்தார். ஆனால் அவரோ அதனை அடியோடு நிராகரித்து விட்டார்.

ஆனால் அமைச்சர் தயா கமகே ஐ.தே.க. தலைமையைத் தன்னிடம் தந்தால் 2020 ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடத் தயார் என்றும் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களை தலைமையகம் சிறிகொத்தவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சந்தித்தார். இந்தச் சந்திப்பி

06▶

## தடை மீறி பக்திப் பயணம்



கடற்படை நெருக்கடியை மீறி வரலாற்றுப் பெருமைமிக்க இரணைதீவு செபமாலை மாதா ஆலய வருடாந்த தவக்கால யாத்திரை வழிபாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பல நூறுபேர் கடற்படையின் எதிர்ப்பை மீறிப் படகுகளில் சென்று பங்கேற்றனர்.

## செவ்வாயன்று அமைச்சரவை மாறும்

கொழும்பு, பெப்.18,

கூட்டு அரசாங்கத்தின் இரண்டாவது அமைச்சரவை மாற்றம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் ஆதரவுடன் இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று கூறினார்.

இதற்கிடையே, தனித்து ஆட்சியமைப்பதற்கான புதிய அமைச்சர்களின் பட்டியலைத் தயாரிக்கும் பணியில், ஐ.தே.கவின் மூத்த தலைவர்களான மலிக் சமரவிக்கிரம, சாகல ரத்நாயக்க, கபீர் காசிம் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் என தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## மாட்டியது கொள்ளைக் குழு

கோப்பாய், பெப்.18,

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கொள்ளை, வழிப்பறிகளுடன் தொடர்புடைய மூவர் குழுவை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி திருநெல்வேலி - நல்லூர் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணின் நகையை குழுவொன்று பறித்துச் சென்றது. கோப்பாய் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அப்பகுதியில் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

இதன்போது 20 தொடக்கம் 23 வயதுக்குட்பட்ட மூவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

06▶


## ஜனாதிபதி – பிரதமர் விரைவில் சந்திப்பர்

கொழும்பு, பெப்.18,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டம் தொடர்பிலேயே இவர்கள் பேசவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

அடுத்த வாரம் இடம்பெறும் இச்சந்திப்பில், உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின் அரசாங்கத்துக்குள் எழுந்துள்ள நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பிலேயே மீண்டும் பேசவுள்ளனர். இருவரும் முன்னர் சந்தித்து இது தொடர்பில் பேச்சு நடத்திய போதிலும், இப்பிரச்சினைக்குத் சுமூகத் தீர்வு காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## மோதிப் பார்ப்போமா...?



யாழ்ப்பாணம், பெப். 18

"உள்ளூராட்சி மன்றங்களில் யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில் யாருக்கு பெரும்பான்மை உள்ளதென்பதை அறிய இரகசிய வாக்கெடுப்பை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும். அவ்வாறு நடக்கும்போது யாருக்குப் பெரும்பான்மை கிடைத்து யார் ஆட்சி அமைப்பதுஎன்றுபார்த்துக்கொள்வோம்"

எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சவால் விடுத்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ. கஜேந்திரகுமார்.

'இவ்வாறான வாக்கெடுப்பை நடத்த ஏன் பயப்பட வேண்டும். தமது உறுப்பினர்களை மிரட்ட வேண்டும்" என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

திருநெல்வேலி மணற்றறை வீதியிலுள்ள அவர்களின் கட்சித் தலைமையகத்தில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். இதன்போதே மேற்கண்ட சவாலை அவர் விடுத்தார்.

06▶

# கோத்தபாயதான் அடுத்த ஜனாதிபதி



(மகிந்த அணி எம்பி உதயகம்மன்பில சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வி)

மொழியாக்கம்: எஸ்.சுரேஷ்

**கே:** இந்தத் தேர்தல் வெற்றியை நீங்கள் எதிர்பார்த்து இருந்தீர்களா?

**ப:** வெற்றியை எதிர்பார்த்திருந்தோம். ஆனால், இப்படியொரு பெரும் வெற்றியை எதிர்பார்க்கவில்லை. இந்த வெற்றி கடந்த கால வரலாற்றை மாற்றியதோடு எதிர்கால மாற்றத்தையும் ஏற்படுத்தப்போகிறது. 1947 இல் இருந்து ஆட்சியில் இருந்த கட்சிகள் உள்ளூராட்சி சபைகளில் தோற்றது கிடையாது. அந்த வரலாற்றை இது மாற்றியுள்ளது.

அதேபோல், எதிர்காலத்தில் அரசு செய்யவிருந்த சமஷ்டித் தீர்வை வழங்குதல், இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தம் செய்தல் போன்றவற்றையும் இது தடுக்கின்றது. இருக்கின்ற மீதி வருடங்களை கழித்துவிட்டு வீட்டுக்குச் செல்வதைத் தவிர இந்த அரசுக்கு வேறு வழியில்லை. உடன் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்றே நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

**கே:** உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசு தோல்வியடைந்தால் அரசு வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று எந்தச் சட்டத்தின் அடிப்படையில் நீங்கள் கூறுகிறீர்கள்?

**ப:** சட்டத்தில் இல்லை. ஆனால், தேர்தல் முடிவுகள் அதனையே கூறுகின்றது. எந்தவோர் அரசும் தோற்காத சிறிய தேர்தலையே அரசால் வெல்ல முடியவில்லையென்றால் ஏனைய தேர்தல்களை எப்படி வெல்லப்போகின்றது.

இந்தத் தேர்தலில் 45 வீத வாக்குகளைப் பெற்றுள்ளோம். எதிர்க்கட்சிகள் இவ்வாறான தேர்தல்களில் 30 வீதத்தைத் தாண்டியதில்லை. ஆகவேதான், நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை மக்கள் வேண்டி நிற்கின்றார்கள் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் கூறுகின்றன.

**கே:** இந்த வெற்றியின் இரகசியம் என்ன?

**ப:** 2015 ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்த அரசு எம்மீது போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி மக்களை ஏமாற்றியது. மக்கள் அதை நம்பி மகிந்தவைத் தோற்கடித்தனர். அது பொய் என்பது இந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழலின் ஊடாக மக்கள் அறிந்துகொண்டனர்.

அடுத்து, படையினர், பிக்குகள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மறுக்கப்பட்டன. சமஷ்டியை கொண்டு வருவதற்கு முயற்சிகள் செய்தனர். 10 இலட்சம் வேலை வாய்ப்பு வழங்குவதாக கூறி மக்களை ஏமாற்றினர். வெளிநாட்டு முதலீடுகள் இல்லை. அரச சொத்துக்கள் விற்பனை உள்ளிட்ட பல காரணங்களால்தான் எமக்கு இந்த அபார வெற்றி கிடைத்தது.

**கே:** மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் 48 வீத வாக்குகளையும் நாடாளுமன்றத் தேர்தலில் 46 வீத வாக்குகளையும் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 44.65 வீத வாக்குகளையும் பெற்றுள்ளார். வாக்குகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு அல்லவா வருகின்றது.?

**ப:** இது பிழை. வரலாற்றில் என்றுமே அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தோல்வியடைந்தது கிடையாது. எதிர்க்கட்சிகள் 30 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றது இல்லை. ஆனால், எதிர்க்கட்சியாக இருந்து வெற்றிபெற்றது மாத்திரமன்றி 45 வீத வாக்குகளையும் பெற்றுள்ளோம்.

வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தலிகளில் எதிர்க்கட்சிகள் பெற்ற அதிகூடிய வாக்குவீதம் 48 ஆகும். 2001 இல் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் 46 வீத வாக்குகளைப் பெற்றே ஆட்சிக்கு வந்தது. அதே வாக்கு வீதத்தை நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெற்றுள்ளோம். நாடாளுமன்றத் தேர்தல் வந்தால் அதில் 55 வீத வாக்குகளை பெறுவோம். ஜனாதிபதித் தேர்தலில் 65வீதத்தைப் பெறுவோம்.

இப்போது தமக்குக் கிடைத்திருக்கும் வாக்கு வீதம் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்தால் 114 ஆசனங்கள் எமக்கு கிடைக்கும். ஆட்சியை இலகுவாக அமைக்கலாம். உள்ளூராட்சி சபைத் தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாகப் பார்க்குமாறு கோரியே நாம் மக்களிடம் வாக்குக் கேட்டோம். அவ்வாறுதான் அவர்கள் வாக்களித்துள்ளனர். அடுத்துவரும் தேர்தல்களில் மக்கள் இதைவிடவும் அதிகமாகவே வாக்களிப்பர்.

ஜனாதிபதி ஒருவரின் கட்சி ஒருபோதும் 13 வீத வாக்குகளைப் பெற்றதும் இல்லை, அவரது மாவட்டத்தில் அவரது கட்சி தோற்றதும் இல்லை. ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் அடுத்தடுத்து இரு தடவைகள் தோல்வியடைந்துள்ளார். சுதந்திரக் கட்சி இனியாவது சரியான தீர்மானத்தை எடுக்கவில்லை என்றால் அந்தக்கட்சி எம்.பிக்கள் கட்சியைவிட்டுவிட்டு எம்முடன்வந்து இணைந்துவிடுவர்.

**கே:** மகிந்தவின் கட்சி வெற்றி பெற்றிருப்பது தனிச் சிங்கள மக்களின் வாக்குகளால் ஆகும். ஆனால், முஸ்லிம் மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் தோல்வியடைந்துள்ளீர்கள். காலி நகர சபை மற்றும் அம்பாந்தோட்டை மாநகர சபை ஆகிய சபைகளை முஸ்லிம்களின் வாக்குகளைக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்றுள்ளதே?

**ப:** அது பிழை. உதாரணத்துக்கு பேருவளையில் ஐக்கிய தேசிய கட்சி தோற்கடிக்கப்பட்டு எமது கட்சி ஆதரவு வழங்கிய சுயேச்சைக் குழுவே வெற்றி பெற்றது. அதேபோல் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள பண்டாரவளை நகர சபையையும் நாம் கைப்பற்றினோம்.

அத்தோடு தமிழர்களின் செல்வாக்குள்ள லிந்துலை தலவாக்கலை நகர சபையை வென்றுள்ளோம். எம்முடன் அதிகமான தமிழர்களும் முஸ்லிம்களும் எம்முடன் இணைந்துள்ளனர் என்பது இதன்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**கே:** உங்கள் கட்சியில் தெரிவான உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு வேறு கட்சிகளுக்கு தாவமாட்டார்கள் என்று உத்தரவாதம் தர முடியுமா?

**ப:** எங்கள் கட்சியில் தெரிவாகி இருப்பவர்கள் அனைவரும் நேர்மையானவர்கள்-பணத்துக்கு அடிமையாகாதவர்கள் என்று நான் சொல்லமாட்டேன். நீங்கள் சொல்கின்ற பணத்துக்கு விலை போகும் சம்பவங்கள் இடம்பெறாது என்று சொல்ல முடியாது. ஆனால், அதைத் தடுப்பதற்கான வியூகம் வகுத்தே நாம் செயற்படுவோம்.

**கே:** நாடாளுமன்றில் கட்சி மாற முடியும். உள்ளூராட்சி சபைகளில் கட்சி தாவுவதற்கான தடை எதுவும் புதிய சட்டத்தில் உண்டா?

**ப:** நாடாளுமன்றில்கூட கட்சி தாவ முடியாது. ஐக்கிய தேசிய கட்சி எம்.பி ஒருவர் அமைச்சுப் பதவியை ஏற்றபோது அவரைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை நடவடிக்கை எடுத்தது. ஆனால், 225 நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஜனாதிபதியால் அமைச்சுப் பதவி கொடுக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்தது. தான் கட்சியை விட்டு விலகவில்லை என்று அந்த உறுப்பினர் கூறினார். இதனால் அவரைக் கட்சியில் இருந்து நீக்க முடியவில்லை.

இந்தப் புதிய தேர்தல் முறைமையின்படி, உறுப்பினர் ஒருவரை நீக்கினால் மாத்திரம் இடைத் தேர்தல் நடத்தப்படும். உறுப்பினர் மரணித்தால் அல்லது தானாக விலகினால் கட்சியின் செயலாளர் வேறு ஒருவரை நியமிப்பார்.

ஆகவே, கட்சி தாவ முடியும். ஆனால், அவர் விலக்கப்பட்டு இடைத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். அவர் கட்சி மாறியது சரியென்றால் மக்கள் அவருக்கு மீண்டும் வாக்களிப்பர். அல்லது அது பிழையென்றால் வேறு ஒருவரைத் தெரிவு செய்வர். அந்த உறுப்பினர் கட்சி தாவுவதற்கு எடுத்த முடிவு சரியா, பிழையா என்று தீர்மானிக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்படுகின்றது. உண்மையில் இது சிறந்த ஜனநாயக ஏற்பாடாகும்.

**கே:** அரசின் தோல்விக்கு மகிந்த ஆட்சியில் இருந்த ஊழல்வாதிகள் தண்டிக்கப்படாமையே காரணம் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார். அவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுத்தால் மீண்டும் வெல்ல முடியும் என்று கூறியுள்ளார். இதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**ப:** அப்படியென்றால் எங்கள் கட்சிக்கு மக்கள் வாக்களித்திருக்கமாட்டார்கள். ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற ஜே.விபிக்கு அல்லவா வாக்களித்திருக்க வேண்டும். மகிந்தவுக்கு வாக்களித்திருப்பதன்மூலம் மகிந்த மீதான குற்றச்சாட்டுக்கள் பொய் என்பதை மக்கள் விளங்கி வைத்துள்ளனர் என்பது புரிகிறது.

**கே:** மகிந்தவை பிரதமராக்குவதற்காக வாக்களிக்குமாறு நீங்கள் மக்களிடம் கேட்டீர்கள். தேர்தல் முடிந்த பின் பிரதமர் பதவியை ஏற்கத் தயாரில்லை என்று மகிந்த கூறுகின்றார். அப்படியென்றால் நீங்கள் மகிந்தவை திட்டமிட்டு ஏமாற்றியுள்ளீர்கள் அல்லவா?

**ப:** நாம் மகிந்தவை மேடையில் வைத்துக்கொண்டுதான் இதைப் பேசினோம். அப்படியென்றால் அவர் அதைத் தடுத்திருக்க வேண்டும். ரணில் சமஷ்டியைக் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறார். யார் தடுத்தாலும் இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தம் செய்வேன் என்கிறார்.

சீனாவிடம் அம்பாந்தோட்டை துறைமுகத்தைக் கொடுத்தார். இன்னும் பல சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்கவுள்ளார். இதையெல்லாம் தடுப்பதென்றால் ரணிலைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும். இதனால்தான் நாம் பிரதமர் பதவியை மகிந்தவிடம் கொடுக்க வேண்டும் என்று மக்களிடம் கூறினோம். நாம் எதிர்பார்த்திராத வெற்றியை மக்கள் எமக்குத் தந்தனர்.

இந்த வெற்றி அரசை ஆட்டங்காணச் செய்துள்ளது. பிரதமர் பதவி விலக வேண்டும் என்றும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும் அரசுக்குள்ளேயே போராட்டம் வெடித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு 20 மாதங்கள் இருக்கின்றன. இந்த நிலையில் நாம் மைத்திரியிடம் போய் பிரதமர் பதவியை பெற்றுக்கொண்டால், அரசு செய்கின்ற பிழைகளை பார்த்துக்கொண்டு இருக்க வேண்டி வரும். அவ்வாறு இருப்பதற்காக மக்கள் எமக்கு வாக்களிக்கவில்லை. இந்த நேரத்தில் நாம் அரசைக் கொண்டு நடத்துவது எமக்கு நட்டத்தை ஏற்படுத்தும். ஆகவே நாம் இப்போது எதிர்கட்சியிலேயே இருப்போம்.

**கே:** மகிந்தவின் கட்சியில் இரண்டாம் நிலைத் தலைவர்கள் எவரும் உருவாகி இருப்பதாகத் தெரியவில்லையே?

**ப:** அப்படியான தலைவர்களை நாம் அடையாளம் கண்டு இருக்கின்றோம். பலர் உள்ளனர். இவர்தான் என்று சொல்ல முடியாத அளவுக்கு அதிகமான தலைவர்கள் உள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் வந்தால் அது புரியும். மிகவும் பிரபல்யமான வேட்பாளரை-இரண்டாம் நிலைத் தலைவரை நாம் களமிறக்குவோம்.

இந்த நாட்டில் மிகவும் பிரபல்யமானவர் மகிந்ததான். அவருக்கு அடுத்த நிலையில் உள்ளவர் கோத்தபாய ராஜபக்ஸதான். இதை இந்த நாடு ஏற்றுக்கொள்ளும். மகிந்தவின் தலைமைத்துவத்தின் கீழ் புலிகளை ஒழித்தவர் கோத்தபாய தான் என்று முழு நாட்டுக்குமே தெரியும். புலிகளை ஒழிக்கவே முடியாது என்று இந்த நாடே நம்பி இருந்தது.

கோத்தபாய எந்தவொரு வேலையையும் முறையாக-நேர்த்தியாகச் செய்கின்றவர் என்று எல்லோருக்கும் தெரியும். அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் இவருக்கு வாக்களிப்போம் என்று ஐக்கிய தேசிய கட்சியினர் கூடக் கூறுகின்றனர்.

ஆனால், கோத்தாவிடம் கேட்டால் "நான் எந்தவொரு வேலையையும் சரியாக செய்ய விரும்புகிற ஒருவன். எனக்கு எல்லாமே சரியாக இருக்க வேண்டும். ஓர் அதிகாரியாக இருப்பதற்கே நான் தகுதியானவன். நான் அரசியலுக்குப் பொருத்தமற்றவன்" என்று கூறுகின்றார்.

அவர் அரசியலுக்குத் தகுதி இல்லை என்று சொல்லும்போது மக்களோ அவர்தான் தகுதியானவர் என்று கூறுகின்றனர். அவர் ஜனாதிபதிப் பதவி மீது ஆசை இன்றி இருக்கின்றார். அல்லது இந்த அரசியல் கலாசாரத்தைப் பார்த்து அதிருப்தியடைந்துள்ளார். அவர் விருப்பம்கொண்டு தேர்தலில் போட்டியிட்டால் அது இந்த நாடு செய்த புண்ணியமாகும்.

எதிரொலி Ethiroli
ஞாயிறு, 18 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# விலாங்கு மீனின் சுயநலம்

நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்துக்கு முழுமுதற் காரணம் யாரெனக் கேட்டால், எந்தத் தயக்கமுமின்றி சுட்டுவிரலை ஜனாதிபதி மைத்திரியை நோக்கி நீட்டிவிடலாம்.

உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்தவின் பொதுஜன பெரமுன மிகப்பெரிய வெற்றியைப் பெற்றாலும், அதற்கடுத்த இடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்த இடத்திலேயே மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சி இருக்கின்றது. எனவே ஒரு நாட்டின் ஆட்சியையே பிடிக்குமளவுக்கு வலுவோடு இருந்த ஒரு தேசியக் கட்சியை, உள்ளூராட்சி சபைகளைக் கூட கைப்பற்றத் திராணியற்ற நோஞ்சான் கட்சியாக மாற்றிய பெருமை மைத்திரிக்கே உண்டு.

மைத்திரி விலாங்குமீனின் குணத்தைக் கொண்டவர். அதனால் தான் மகிந்தவின் வீட்டில் அப்பம் சாப்பிட்டு, செமிப்பதற்கு முன்னதாகவே ரணிலோடு கைகோர்த்தார். ஜனாதிபதித்தேர்தல் பிரசாரத்தின் போது, தான் வெற்றிபெற்ற அடுத்த நொடியே கட்டுநாயக்க விமான நிலையத்தை மூடி, அதனூடாக மகிந்த குடும்பத்தினர் தப்பிக்க விடாமல் செய்யப் போவதாகவும், அவர்கள் எல்லோரையும் செய்த தவறுகளுக்கு தண்டனை பெற வைப்பதாகவும் முழங்கினார். ஆனால், கட்டுநாயக்க மூடப்படவுமில்லை. மகிந்த குடும்பத்து ஊழல்கள், குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் முற்றுப் பெறவுமில்லை. ஏதோ ஒரு பயமுறுத்தலுக்காக நாமல், பஸில் என்போரை சிலநாட்கள் சிறை வைத்து விட்டு, பிணையில் ஓடி விளையாடுங்கள் என்று விட்டாயிற்று.

ரகர் வீரர் வாசிம் தாஜுதீனை திட்டமிட்டுக் கொன்று விட்டு, அதை விபத்து என்று மகிந்த குடும்பத்தினரே மூடி மறைத்தார்கள் என்று சாதாரண பொதுமகனுக்கும் புரிந்த ஒரு விடயம். போதுமான ஆதாரங்கள் கிடைத்தும் கூட அந்த வழக்கை எவ்வளவு தூரம் இழுக்க முடியுமோ அவ்வளவுக்கு இழுத்துக் கொண்டே போகிறார் மைத்திரி. மகிந்த குடும்பத்தினர் வாங்கிக் குவித்த சொத்துக்கள், அபிவிருத்தித் திட்டங்களில் சுருட்டிய நிதி என்பவற்றை மோப்பம் பிடித்து, கூண்டிலேற்ற அமைக்கப்பட்ட பாரிய லஞ்சம், ஊழல் ஆணைக்குழுவின் அறிக்கை இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் அதன் பின்னர் நிகழ்ந்த மத்திய வங்கி பிணைமுறி மோசடி அறிக்கை மட்டும் உடனடியாக வெளிவந்து ஐக்கிய தேசியக் கட்சி மீது அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது.

அதற்காக பிணைமுறி மோசடிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தொடர்பில்லை என்று அர்த்தமல்ல. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அடித்ததை விடவும் பல மடங்கு பணத்தையும், சொத்துக்களையும், வளத்தையும் மகிந்த கும்பல் சுருட்டியிருந்தது.ஆனால் அனுமார் வால் போல முடிவிலியாக நீண்ட விசாரணைகளால், அந்த ஊழல் மோசடிகள் யாவும் ஆறிப்போய், பழங்கஞ்சியாகி விட்டன.


அத்தோடு கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்ய முனைந்தபோது, அதனை ஜனாதிபதி மைத்திரியே நேரடியாகத் தலையிட்டுத் தடுத்தார். பத்திரமாக அவரை அமெரிக்காவுக்கும் அனுப்பிவைத்தார்.

சுதந்திரக் கட்சிக்கு எதிரான பொது எதிரணியையும், பொது ஜன பெரமுனவையும் உருவாக்கிய போதே மகிந்தவையும் அவர் சார்ந்த கும்பலையும் கூண்டோடு கட்சியை விட்டு நீக்கியிருக்க முடியும். ஆனால் , நீக்குவோம் என்று மைத்திரி சொல்லிக் கொண்டே இருந்தாரே தவிர, அப்படி எதுவும் செய்யவில்லை. விளைவு? சுதந்திரக் கட்சியின் இரண்டாம் கட்டத் தலைவர்களையும், அடிமட்டத் தொண்டர்களையும் தன் பக்கம் வளைத்து, இப்போது உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த பெரு வெற்றியீட்டி, அரசியல் குழப்பத்தையும் உண்டு பண்ணி விட்டார். இப்போது கூட 'ரணில் தான் பிரதமர்' என்று சொல்லி விட்டு மைத்திரி தன்பாட்டில் இருந்தால் எந்தக் குழப்பமும் இல்லை. ஆனால், மகிந்த தரப்பை இழுத்து வந்து, ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அரசினை உருவாக்க மைத்திரி ஓடித் திரிகின்றார். இப்படி எல்லாவற்றையும் குழப்பிவிட்டு, தன் பதவியையும், கட்சித் தலைமையையும் பாதுகாப்பதில் அவர் குறியாக இருக்கிறார். "நாடும் மக்களும் நாசமாகப் போகட்டும், நான் பதவியை இழக்காமல் இருந்தால் போதும்" என்ற நினைப்பு, ஒரு ஜனாதிபதிக்கு இருந்தால் இதைவிடவும் மோசமான குழப்பங்கள் நிகழத்தான் செய்யும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# இரு எண்ணெய்க் குதங்கள் காங்கேசனில் அமைக்கப்படும்

## யாழ்ப்பாணத்தில் அர்ஜுன தெரிவிப்பு




யாழ்ப்பாணம், பெப்.18,

காங்கேசன்துறையில் பாரிய இரண்டு எண்ணைக் குதங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், பத்து ஏக்கரில் காங்கேசன்துறை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கனியவளங்கள் மற்றும் பெற்றோலிய அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். இதன் மூலம் எரிபொருட் தட்டுப்பாட்டு நிலை நிவர்த்திக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் வட பிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபன விற்பனை முகவர்களுடனான சந்திப்பொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்றது. யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் கனியவளங்கள் மற்றும் பெற்றோலிய அமைச்சர் அர்ஜுன ரணதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வடபிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

வடமாகாணத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கீழுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் எரிபொருள் விற்பனை நிலைய உரிமையாளர்கள் இதன் போது வெளிப்படுத்தினர். குறிப்பாக வடக்கில் அடிக்கடி நிலவும் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதுடன், நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் புனரமைத்து தருமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கான நீண்டகால திட்டமொன்றை யாழ். மாவட்டத்தை முன்னிலைப்படுத்தி தாம் முன்னடுக்கவிருப்பதாக அமைச்சர் இங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். இந்தக் கலந்துரையாடலில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன முகாமையாளர் சஞ்ஜீவ விஜயரட்ண, அமைச்சின் அதிகாரிகள், வடமாகாண பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர்கள், உயர் அதிகாரிகள், முகவர்க்ள் எனப் பலர் கலந்துகொண்டனர். (இ)

# 50 முன்னாள் போராளிகள் இராணுவத்தில் இணைப்பு



யாழ்ப்பாணம், பெப்.18,.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 50 பேரை இராணுவத்தில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு ஆணையாளரின் பணிப்புரைக்கமைய, யாழ். பாதுகாப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாரச்சியின் மேற்பார்வையில், யாழ் பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமைஇந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்விற்கு யாழ் பாதுகாப்பு படைத் தளபதி மற்றும் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த முன்னாள் போராளிகளுக்கு மாதாந்தம் 40,000 ரூபாய் சம்பளமும், மருத்துவ வசதிகளும், 55 வயதின் பின்பு ஓய்வூதியமும் வழங்கப்படவுள்ளதோடு, இவர்கள் பலாலியிலுள்ள இராணுவப் பண்ணைகளில் தென்னை மரங்களைப் பராமரிப்பதற்கான சேவையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். புதிதாக நியமனம் பெற்ற இளைஞர் மற்றும் யுவதிகள் நாளொன்றிற்கு 8 மணித்தியாலயம் சேவையில் ஈடுபட வேண்டும் எனும் நிபந்தனைகளுக்கமையஇணைக்கப்பட்டுள்ளதோடு, இவர்கள் தமது சொந்த எதிர்காலத்தைக் கவனித்துக் கொள்வதன் மூலம் ஒரு குடும்பத்தாரை போலவே ஒரு நாட்டில் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் இவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ)

# ஆட்சியைப் பொறுப்பேற்கோம்!

## மகிந்த தெரிவிப்பு



கொழும்பு, பெப்.18,

இந்த நாட்டைச் சரி செய்யாமல் இடைநடுவில் நாட்டைப் பொறுப்பேற்பது உசிதமானதல்ல. இந்த கூட்டணி அரசாங்கம் எஞ்சியுள்ள காலத்தை எவ்வாறு கடத்தப் போகின்றது என்பதில் நாம் அவதானமாகவுள்ளோம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் ஆட்சியாளர்கள் செயற்படும் விதம் குறித்து நாம் அவதானத்துடன் உள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சி இன்று துண்டு துண்டாக உடைய ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் அரசாங்கத்திலுள்ள பொறுப்புக்களை ஏற்க வருமாறு கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தனர். இருப்பினும், அவர்கள் இப்படியான நெருக்கடி மிக்க நிலையில் பொறுப்புக்களை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியுடன் அரசாங்கத்தை முன்னெடுக்க தீர்மானித்தால், கூட்டு எதிர்க் கட்சியின் எந்தவொரு ஆதரவும் அதற்கு கிடைக்காது என்றார். (இ)

# போதை மாத்திரைகளுடன் பிரேசில் நாட்டவர் கைது

கொழும்பு, பெப்.18,

கொக்கேயின் போதை அடங்கிய மாத்திரைகளை நாட்டுக்குள் கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் பிரேசிலைச் சேர்ந்த ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய போதைத் தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்றுக் காலை இலங்கை வந்துள்ளார். அவரைச் சோதனையிட்டபோது, அவரது உடலில் 45 கூட்டுக் குளிகை வடிவ மாத்திரைகள் இருந்ததை சுங்கத்துறையினர் அவதானித்தனர்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையில், அவற்றில் கொக்கெய்ன் போதைப் பொருள் அடங்கியிருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்தது. இதையடுத்து, அவர் போதைத் தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (இ)



# இன்று நாளும் கோளும்

18.02.2018 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 06 ஆம் நாள்

திருதியை காலை 04.53 மணி வரை | பூரட்டாதி பகல் 12.38 மணி வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் மு.ப. 06.30 - 07.30 | எமகண்டம் பி.ப. 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொறுமை | உழைப்பு | நட்டம் | செலவு | மறதி | இரக்கம் | நன்மை | அமைதி | நற்செயல் | போட்டி | நட்பு | வெற்றி |

# மைத்திரியே விலகவேண்டும்

## ஐ.தே.க. எம். பி காட்டம்



கொழும்பு, பெப்.18

"தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பிரதமர் பதவி விலக வேண்டுமென்றால் முதலில் பதவி விலக வேண்டியவர் ஜனாதிபதிதான். ஐக்கிய தேசிய கட்சியை விடவும் அவரது சுதந்திரக் கட்சிதான் குறைந்த ஆசனங்களை பெற்று தோல்வியடைந்துள்ளது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

"தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பிரதமர் பதவி விலக வேண்டுமா இல்லையா என்று முடிவு எடுக்க வேண்டியது எமது கட்சியே தவிர கட்சிக்கு வெளியில் இருப்பவர்கள் அல்லர். பதவி விலகும் அளவுக்கு நாம் தோல்வியுடையவில்லை.

பிரதமர் பதவி விலகக்கூடாது என்பதுதான் கட்சி உறுப்பினர்கள் அனைவரினதும் ஒரே நிலைப்பாடாகும். ஆனால், கட்சிக்குள் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் அனைவரும் இருக்கின்றோம்.


தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பிரதமர் பதவி விலக வேண்டுமென்றால் முதலில் பதவி விலக வேண்டியவர் ஜனாதிபதிதான். ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் அவரது சுதந்திரக் கட்சிதான் குறைந்த ஆசனங்களைப் பெற்று தோல்வியடைந்துள்ளது. நாம் ஜனாதிபதியைவிட அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளோம்.

நாம் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்றபோது இது சர்வதேச சதி, மக்கள் அளித்த வாக்குகளால் வெல்லவில்லை என்றெல்லாம் கூறினார்கள். ஆனால், மகிந்தவின் ஆட்கள் வெற்றி பெற்றால் மாத்திரம் சர்வதேச சதி இல்லை. அந்த வெற்றி மட்டும் மக்கள் கொடுத்தது என்று பேசுகின்றனர்.

மகிந்தவின் கட்சிக்கு அதிகமான மக்கள் வாக்களித்துள்ளனர் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இந்த மக்களின் ஆணையை அடிப்படையாக வைத்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். எம்மிடம் குறைபாடுகள் காணப்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்துகொண்டு - எமது கட்சியைப் பலப்படுத்திக்கொண்டு பயணிப்போம்.

இது அரசை கவிழ்க்கும் தேர்தல் அல்ல. எம்மிடம் காணப்படும் பிழைகளை மக்கள் சுட்டிக் காட்டும் தேர்தலாகும். அதையே மக்கள் செய்துள்ளனர். நாம் தோல்வியடையவில்லை. மகிந்தவின் கட்சியைவிட எமக்கு வாக்குகள் குறைந்துள்ளன. தோல்வி என்பது வேறு. வாக்குகள் குறைவாகக் கிடைப்பது என்பது வேறு" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# சொல்லாதே யாரும் கேட்டால்







மகிந்த அணியின் உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து அந்த அணி அடுத்து வரவுள்ள மாகாண சபை, நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தலைக் குறி வைத்துக் காய் நகர்த்தி வருகின்றது. அதில் முக்கியமானது ஜனாதிபதித் தேர்தல்தான்.

அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அந்த அணிக்குள் மூன்று பேருக்கிடையில் போட்டி நிலவி வருகின்றது. ஒருவர் நாமல் ராஜபக்ச, மற்றையவர் பஸில் ராஜபக்ச மூன்றாம் நபர் கோத்தபாய ராஜபக்ச.

இவர்கள் மூவருக்கும் அந்தக் கட்சிக்குள் மூன்று வெவ்வேறு பிரிவினர் ஆதரவு வழங்குகின்றனர். மகிந்தவின் ஆதரவு நாமலுக்கு, அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆதரவு பஸிலுக்கு மற்றும் விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினரின் ஆதரவு கோத்தபாயவுக்கு.

ஆனால், இவர்களை யாரை நிறுத்துவதென்று இப்போது இறுதித் தீர்மானம் எடுத்தாலும்கூட அதை வெளியே சொல்வதில்லை என்று அவர்கள் முடிவெடுத்துள்ளார்களாம். காரணம் என்ன தெரியுமா? இவர்தான் வேட்பாளர் என்று தெரிந்துவிட்டால் இந்த அரசு ஏதாவது குற்றச்சாட்டைச் சுமத்தி அவரை சிறையில் அடைத்துவிடும் என்ற அச்சம்தான் இதற்குக் காரணமாம்.

இதனால் இறுதி வரைக்கும் வேட்பாளரை தெரியப்படுத்துவதில்லையாம். ஒருவேளை நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கினால் அவ்வளவுதான் போல.

# துப்பாக்கியுடன் ஒருவர் சிக்கினார்

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரிடம் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கியும், 611 ரவைகளையும் மீட்டுள்ளதாக நெடுங்கேணிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெடுங்கேணி மாறாயிலுப்பை நாகதம்பிரான் கோவிலடியில், நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வீதிக் கடமையில் நின்ற போக்குவரத்துப் பொலிஸார் அவ்வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிளை மறித்து சோதனை செய்த போதே குறித்த ரி-56 ரக துப்பாக்கியும், ரவைகளும் மீட்கப்பட்டன.

இதனையடுத்து குறித்த மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த வவுனியா, குளவிசுட்டான் பகுதியைச் சேர்ந்த 45வயதுடைய சிவசம்பு ஜெயரதன் என்ற நபரைக் கைது செய்துள்ளதாகவும், குறித்த நபரை வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அரசியல் குழப்பத்தால் நல்லிணக்கம் பாதிக்கும்



## மல்வத்தை பீட மகாநாயக்கர் கடிதம்

கொழும்பு, பெப்.18

நாட்டில் ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலை மற்றும் குழப்பங்களை முடிவுக்குக் கொண்டு வந்து, கடந்த ஜனாதிபதித் தேர்தல், மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதியையும், பிரதமரையும், மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவசர கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதத்தில், அவர், உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள உறுதியற்ற நிலை மற்றும் குழப்ப நிலை என்பன நல்லிணக்கத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த நிலை தொடர்ந்தால், நாட்டின் ஆட்சி மற்றும் பொருளாதாரம் ஆபத்தான நிலைக்குள் தள்ளப்படும். எனவே அரசாங்கம், கடந்த ஜனாதிபதித் தேர்தல், மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

விவசாயம், மதங்கள், கலாசாரம், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்க வேண்டும்.

அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து, தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும்" என்றும் மல்வத்தை பீட மகாநாயக்கரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மாணவர்களுக்கு கௌரவிப்பு





வடமராட்சி, பெப்.18

2017 ஆண்டுக்கான கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேசிய நிலையிலும் மாகாணமட்டத்திலும் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு விழா சந்நிதியான் ஆச்சிரமத்தில், நேற்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் ஆ. நடராஜன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி, கௌரவித்தார். (அ- 11)

# தேர்தல் கொடுப்பனவுகள்: சுற்றுநிருபம் வெளியானது

கொழும்பு, பெப்.18

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் கடமையில் ஈடுபட்ட அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு தொடர்பான சுற்று நிருபத்தை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க வெளியிட்டுள்ளார்.

அதன்படி மாவட்டத் தெரிவத் தாட்சி அலுவலரின் நியமனத்தைப் பெற்று தேர்தல் கடமையில் ஈடுபட்ட அலுவலர்களுக்கான கொடுப்பனவு விபரம் வருமாறு:

வலய மற்றும் வட்டார உதவி தெரிவித்தாட்சி அலுவலருக்கு 4000 ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 3750 ரூபா, மேலதிக சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 3250 ரூபா, விசேடகனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 2250 ரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் அல்லது எழுதுனருக்கு 2000 ரூபா, அலுவலக கனிஷ்ட ஊழியருக்கு 1750 ரூபாவும் வழங்கப்படும்.

வாக்கெண்ணும் பணியில் ஈடுபட்ட அலுவலர்களுக்கான கொடுப்பனவு விபரம் வருமாறு:

தலைமை வாக்கெண்ணும் அலுவலர், உதவி தெரிவத்தாட்சி மற்றும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 4500 ரூபா, வாக்கெண்ணும் அலுவலர் அல்லது சிரேஸ்ட 'த்லைமை தாங்கும் அலுவலருக்கு 4350 ரூபா, வாக்கெண்ணும் மேற்பார்வை வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 4350 ரூபா, மேலதிக சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 3000 ரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 2500 ரூபா, கனிஷ்ட ஊழியருக்கு 1500 ரூபாவும் வழங்கப்படும்.

பிரதேச செயலக மட்டத்தில் தாபிக்கப்பட்ட பிரதேச இணைப்பு அலுவலக கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவு விபரம்:

பிரதேச இணைப்பு அலுவலர், உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு 4000 ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 3250 ரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் இலிகிதருக்கு 2500 ரூபா, கனிஷ்ட ஊழியருக்கு 1500 ரூபா வழங்கப்படும். மேலதிக படியாக முறையே 2250 ரூபா, 2000 ரூபா, 1250 ரூபா மற்றும் 750 ரூபா வழங்கப்படும்.

இதேவேளை, வாக்குப்பெட்டிகளை, ஆவணங்களை கையளித்தலும் ஏற்றலும் கடமைக்கான கொடுப்பனவு விபரம்:

கையளித்தலுக்கு :

உதவித் தெரிவித்தாட்சி அலுவலருக்கு 1500 ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 1250 ரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் எழுதுநருக்கு 900 ரூபா, அலுவலக உதவியாளருக்கு 800 ரூபா வழங்கப்படும்.

ஏற்றலுக்கு :

உதவித் தெரிவித்தாட்சி அலுவலருக்கு 2500 ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 2000 ரூபா, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் இலிகிதருக்கு 1500ரூபா, அலுவலக ஊழியருக்கு 1200ரூபா வழங்கப்படும்.

அனைத்துக் கொடுப்பனவுகளும் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன் செலுத்தப்பட்ல் வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ரத்னாயக்க சம்பந்தப்பட்ட சகலருக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார். (அ)

## ஒரு சபைக்கு இரு தவிசாளர்கள் மக்கள் நலனுக்கு விரோதமானது

வடமாகாண சபை உறுப்பினர் கொதிப்பு

வவுனியா, பெப்.18

"ஒரு உள்ளூராட்சி சபைக்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு தவிசாளர் என்ற அடிப்படையில் இருவரை நியமிப்பதன் மூலம் உண்மையான மக்கள் நலத் திட்டங்களை மேற்கொள்ள முடியாது" என வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களாக இருந்தாலும் சரி, அடுத்த கட்டத் தலைவர்களாக இருந்தாலும் சரி உள்ளூராட்சி மன்றங்களினுடைய தாற்பரியத்தை விளங்கிக் கொள்ளாமலும், மக்களது நலன்களை கருத்தில் கொள்ளாமலும் கட்சிகளின் நலனை முன்னிலைப் படுத்தியும், ஒவ்வொரு சபைகளுக்கும் தவிசாளர், உபதவிசாளர்களை நியமிக்கின்ற போது இரண்டு இரண்டு வருடங்களுக்கு ஒருவருக்கு மாறி ஒருவருக்கு கொடுப்பதன் மூலம் அந்த சபையின் நடவடிக்கைகள் மிகவும் பலவீனமாகி விடும். ஒரு உள்ளூராட்சி சபையில் தலைவராக வருபவர் அந்த சபை தொடர்பில் முழுமையாக அறிய ஒரு வருடம் தேவை. அதன் பின் தான் அவர் சேவை செய்ய முடியும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை கட்சி நலனை கருத்தில் கொள்ளாது மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு சபைகளுக்கும் ஒவ்வொரு தவிசாளரை சபையின் 4 வருட ஆயுட் காலத்துக்கும் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## ஈரானும் நுழைவு!

கொழும்பு, பெப்.18,

ஈரான் நாட்டின் மூன்று போர்க் கப்பல்கள் இலங்கைக்கான நல்லெண்ண பயணத்தை மேற்கொண்டுள்ளன.

பயண்டொர், நக்டி மற்றும் ரொன்ப் ஆகிய மூன்று கடற்படை கப்பல்களே நல்லெண்ணப் பயணமாக நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. இந்தக்கப்பல்களை கடற்படையினர் சம்பிரதாய மரியாதை செலுத்தி வரவேற்றனர். குறித்த கப்பல்களில் ஈரான் கடற்படை உயர் அதிகாரிகள் உள்ளிட்ட கடற்படையினர் வருகை தந்துள்ளனர்.

இங்கு தரித்து நிற்கவுள்ள காலப் பகுதியில் இலங்கை கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ள பல்வேறு கலாச்சார நிகழ்வுகளில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். நாளை இந்த கப்பல்கள் நாட்டை விட்டுப் புறப்படும். (இ)

## டிப்பர் பள்ளத்தில் வீழ்ந்தது



மூதூர், பெப்.17,

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கங்கைப் பகுதியில் இருந்து கொழும்பு நோக்கி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் ரக வாகனம் ஒன்று, கங்கை பிரதேசத்தில் உள்ள மதகு ஒன்றில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியது. இதன்போது டிப்பர் ரக வாகனச் சாரதி சிறிய காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.


குறித்த டிப்பர் ரக வாகனம் பள்ளத்தில் வீழ்ந்ததனால் யானைகளுக்கான தடுப்பு வேலியும் சேதமாகியுள்ளது. இந்த விபத்துத் தொடர்பில் கிண்ணியா பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



## மருத்துவமனைக்கு அன்பளிப்பு

வடமராட்சி, பெப்.18

தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவுக்கு, வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றை மருத்துவ அத்தியட்சகரும் குருதிவங்கிப் பொறுப்பதிகாரியுமான மருத்துவர் எம் .பிரதீபனிடம் கையளித்தார். (அ-11)



## நாங்களும் அப்பிடி நிக்கிற நிலைமை வருமோ கெதியா?

கேடு கெட்ட கதை. எட எலக்சனாலை சொந்தம் பந்தம் எண்டும் பாக்காமல் மச்சானும் மச்சானும் எல்லே அடிபடுகிறாங்கள். தம்பியும் தமையனும் அடிபடுகிறாங்கள். சிநேகிதருக்கை அடிபாடு. சந்தோஷமா இருந்த கன குடும்பங்கள் உந்தக் கோதாரியிலை போன எலக்சனாலை இப்ப எதிரும் புதிருமாப் போய்க்கிடக்கு. ஆளை ஆள் முகம் பாக்கிறாங்களில்லை. எழுதக்கூடியவன் எழுதியும் தள்ளுறான். அதிலும் ஆகலும் கொழுப்புப் பிடிச்சு ஆடுறவை உந்த பேஸ்புக் எண்ட கோதாரி ஒண்டை வைச்சிருக்கிறவை தான் தங்களுக்கு தெரிஞ்சதை எல்லாம் கண்ட கண்டபடி போட்டுத் தள்ளுறது. அது சரியோ? பிழையோ? எண்டு பாக்கிறதில்லை. அதிலை அரைவாசிக்கு தமிழை வடிவா எழுதவும் தெரியாது. "ற" வுக்கு "ர" வும் "ழ்" க்கு "ல்" லும் போட்டு தமிழைத் தமில் ஆக்கி அவையின்ரை பாடு பெரும்பாடு.

உப்பிடித் தேவை இல்லாததை எழுதி மினைக் கெடுற ஆக்கள் எத்தினை விதமான நல்ல காரியத்தைச் செய்யலாம். தாங்கள் வாசிச்ச நல்ல விசியங்களைப் படிச்சதிலை பிடிச்சது எண்டு அதிலை போட்டு விடலாம். சமூகத்தை முன்னேற்ற எத்தினை விதமான காரியங்களைச் செய்யலாம். தூஷணம் எழுதாதுதான் ஒரு குறை, பிடிக்காதவையைத் திட்டித் திட்டியும் எழுதிறாங்கள். அது கிடக்கட்டும். அவையத்திருத்த ஏலாது. விடு என்னத்தையும் எழுதட்டும்.

இப்ப ஸ்ரீதரன் எம்பி என்ன சொல்லுறார் தெரியுமோ எண்டு முதலி கேட்டவன். பார்ளிமென்ட் எலக்சனையும் வை எண்டு நிக்கிறார். இப்ப உள்ளூராட்சி எலச்சனிலை நடந்த கூத்தைப் பாத்திட்டாரெல்லே? இனி அவருக்குத் தெரியும் தான் ஒண்டிரண்டு வோட்டாலை தன்னும் வெல்லுவார் எண்டு. அதாலை கிடந்து துடிக்கிறார். அதோடை அவருக்குத் தெரியும் சூட்டோடை அதையும் வைச்சிட்டால் கூட்டமைப்பிலை பெரு மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிற துள்ளல் கோஷ்டி ஒண்டிரண்டு தோத்துப் போம் எண்டு. அதோடை சுமந்திரன் கிளீன் போலட் -ஆவர் எண்டதுதான் அவற்றை சோதிடம் போலை கிடக்கு. பிறகு தான் மட்டும் தனிக்காட்டுப் "புலியா" இருக்கலாம் எண்டது தான் அவற்றை அவசரமே ஒழிய, இப்ப சனத்துக்கு எலக்சன் என்னத்துக்கு எண்டு எனக்கு விளங்கேல்லை? இனிமேல் எத்தினை எலக்சன் வந்தாலும் ஆள் மாறுமே ஒழிய நடைமுறை எங்கை மாறப் போகிது?

அவர் சொல்லுற மாதிரி எலச்சன் நடத்தித்தான் சனத்திட்டை அபிப்பிராயம் கேக்க வேணுமே? எந்தக் கட்சியோடை சேர்வேணும் எண்டு. "தேசியக் கட்சிகளுக்கு ஆதரவு அளிப்பது என்பது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது" எண்டு சொல்லுற ஸ்ரீதரனுக்கு தெளிவாத் தெரியுதெல்லே கூட்டுச் சேந்தால் என்ன நடக்கும் எண்டு கறிவேப்பிலையாக்கிப் போடுவங்கள் எண்டு. எல்லாத்தையும் வடிவாத் தெரிஞ்சு வைச்சிருக்கிற அவர் பேப்பருகளை நிரப்பிறதுக்காக அப்பப்ப ஏதாவது தன்ரை பக்கத்துக்குச் சொல்ல வேணும் எண்டதுக்காகவும் சொல்லி ஆக்களைக் குழப்பக் கூடாது.

அதிருக்கட்டும் எங்கடை காவிச் சிங்கம் ஞான சார தேரரை ஆரோ குழப்பி விட்டிட்டாங்கள். என்னை ஒழிக்க பீரிஸ் உட்படச் சிலபேர் முயற்சிக்கினம் உது சரிவராது. எண்டு சொல்லிப்போட்டு இப்பிடி ஒரு அருவருக்கத் தக்க கதையையும் சொல்லிப் போட்டார். எனக்கே வாசிக்க நாக்குக் கூசுது.

"ஜீ. எல். பீரிஸ் முஸ்லிம் பிரச்சினை தொடர்பா எங்களிலை குற்றஞ் சொல்ல முன்னம் அவர் ஒரு பெரிய கண்ணாடிக்கு முன்னாலை போய் நிண்டு கொண்டு போட்டிருக்கிற கோட்டையும் காற்சட்டையம் கழட்டிப் போட்டு இருக்க வேண்டியது இருக்கிறதா எண்டு தடவிப் பாத்துக் கொள்ள வேணும்" எண்டு தன்ரை அறிவுக்கெட்டினமாதிரி எதையோ பேசி இருக்கிறார். அவருக்கு ஜீ.எல்.பீரிஸிலை அவ்வளவு ஆத்திரம்.

ஏன் உதைச் சொன்னவர் எண்டு தெரியேல்லை. அவற்றை கான் போன் நம்பர் தெரிஞ்சா அவரிட்டை ஒருக்காக் கேட்டுப் பாக்கலாம் எண்டு நக்கலடிக்கிறான் முதலி. கேட்டால் போச்சு. ஆனால் இப்ப இருக்கிற நிலைமையிலை என்ன நடக்கும் தெரியுமே? நாங்கள் சிலவேளை சாரத்தை உரிஞ்சுபோட்டுக் கண்ணாடிக்கு முன்னாலை நிக்க வேண்டியும் வரும்?

பிச்சை வேண்டாம் நாயைப் பிடியெணை!

- வில்லங்கம் விநாசி

# கிளிநொச்சி சபைகளின்

## தவிசாளர், உப தவிசாளர் நியமனம்


திரு. அருணாசலம் ஜயம்பிள்ளை
நல்லூர் வட்டாரம்


திரு. முத்துக்குமார் கஜன்
பளைநகரம் வட்டாரம்


திரு.சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன்
முழங்காவில் வட்டாரம்


திரு. சுப்பிரமணியம் சுரேன்
தம்பகாமம் வட்டாரம்


திரு.சின்னையா தவபாலன்
கண்டாவளை வட்டாரம்


திரு. அருணாசலம் வேழமாலிகிதன்
கணேசபுரம் வட்டாரம்

கிளிநொச்சி, பெப்.18,

கிளிநொச்சி மாவட்டத்தில், நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலினைத் தொடர்ந்து 3 பிரதேச சபைகளிலும் ஆட்சியமைக்கவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிசாளர்கள் மற்றும் உபதவிசாளர்கள் ஆகியோரை நியமித்துள்ளது. கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளையும் கைப்பற்றிக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று சபைகளிலும் ஆட்சியமைக்க உள்ளது.இந்நிலையில், மூன்று சபைகளுக்குமான தவிசாளர்கள் மற்றும் உப தவிசாளர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில், கரைச்சிப் பிரதேச சபையினுடைய தவிசாளராக அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், உப தவிசாளராக சின்னையா தவபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பூநகரி பிரதேச சபையினுடைய தவிசாளராக சிவகுமாரன் சிறிரஞ்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், உப தவிசாளராக அருணாசலம் ஐயம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார். பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினுடைய தவிசாளராக சுப்பிரமணியம் சுரேன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், உப தவிசாளராக முத்துக்குமார் கஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.பச்சிலைப்பள்ளி, கரைச்சி பிரதேச சபைகளின் ஆட்சியைப் பிடிக்க சந்திரகுமார் தலைமையிலான சுயேச்சைக் குழுவும் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இணக்கத்துக்கு மாறா? மறுக்கிறார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், பெப். 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே ஏற்படுத்தப்பட்ட இணக்கத்துக்கு மாறாக எந்தக் கட்சியும் செயற்பட முடியாது என புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆசன ஒதுக்கீடு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. எனினும் பின்னர் இது சமரசமாகத் தீர்க்கப்பட்டது.

இந்நிலையில் இப்போது பங்காளிக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட சபைகளையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்ற முயல்கிறது. இது தொடர்பில் ஊடகவியலார்கள் சித்தார்த்தனிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தன் "உள்ளூராட்சி மன்றங்களில் பங்காளிக் கட்சிகளுடன் இணக்கம் ஒன்றை ஏற்படுத்தியே கூட்டமைப்பாக தேர்தலை சந்தித்தோம். இப்போது அந்த இணக்கத்துக்கு மாறான செயற்பாடுகள் நடக்கின்றன எனத் தெரிய வருகின்றது.

உள்ளூராட்சி மன்றங்கள் எந்தக் கட்சிக்கு என்று தீர்மானிக்கப்பட்டதோ அந்தக் கட்சிக்கே வழங்க வேண்டும் என்பதில் கூட்டமைப்பின் தலைமை மிக உறுதியாகவுள்ளது. ஆகவே மாறான செயற்பாடுகளில் பங்காளிக் கட்சிகள் ஈடுபடாது" என்றார். (ச)

# கட்சி தாவல் அரங்கேறும்!


கொழும்பு, பெப்.18,

தெற்கில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ள நிலையில் கட்சி தாவும் படலம் ஆரம்பமாகலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிருபித்து தனியாட்சி அமைப்பதற்குரிய முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இறங்கியுள்ளன.

106 ஆசனங்களைத் தம்வசம் வைத்துள்ள ஐ.தே.கவுக்கு இன்னும் 7 ஆசனங்களும், 95 ஆசனங்களை வைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இன்னும் 18 ஆசனங்களும் தேவைப்படுகின்றன. இதனால்தான் எம்.பிக்களை வளைத்துப் போடுவதற்கான இரகசியப் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன. தாவலுக்கு ஐ.தே.க. உறுப்பினர்கள் 22 பேர் பச்சைக்கொடி காட்டியுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை நிஷாந்த முத்து ஹெட்டிகம அண்மையில் உறுதிப்படுத்தியிருந்தார். (இ)

## இன்றைய கேலிச்சித்திரம்




# தொடர்ச்சிகள்

## அழுத்துங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டம் வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் தொடங்குகிறது. இந்நிலையில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் முக்கிய கூட்டம் நேற்றுமுன்தினம் பிரிட்டன் தூதுவரின் பணியகத்தில் நடந்தது. இதில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் 26 நாடுகள், அமைப்புகளின் பிரதிநிதிகள் 40 பேர் பங்கேற்றனர். இதில் பங்கேற்றபோதே சுமந்திரன் மேற்சொன்னவாறு கோரினார்.

மார்ச்சில் கூடும் மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கை விவகாரம் முக்கிய இடம் வகிக்கிறது. இந்நிலையிலேயே சுமந்திரன் எம்.பி. "தேர்தல் முடிவுகளால் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களைக் காரணம் காட்டி, இலங்கை அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இருந்து பின்வாங்க சர்வதேச சமூகம் இடமளிக்கக் கூடாது. ஜெனிவா வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுகக் வேண்டும்" என்றார்.

"2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30.1 தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றது. ஆனால் ஒரு சில விடயங்கள் தவிர, ஏனையவை எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலக சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. இந்த விடயத்தில் அரசாங்கத்தின் வேகம் போதாது.

இருக்கின்ற ஒருவருட காலப்பகுதியில் அரசாங்கம் ஜெனிவாவில் சர்வதேச சமூகத்துக்குக் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் முழுமையாக நிறைவேற்ற அழுத்தம் கொடுக்கவேண்டும். அரசாங்கம் நிறைவேற்றுவதாக ஏற்றுக் கொண்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் வேகம் இல்லை. இதில் காத்திரமான முன்னேற்றங்கள் எட்டப்படவில்லை. அரசியலமைப்பு உருவாக்க பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக இங்கு வந்து அரச தரப்பினர் கூறக் கூடும். ஆனால் அது முழுமை பெறவில்லை.

நல்லிணக்கம் விடயத்தில் சில நகர்வுகள் எடுக்கப்பட்டாலும் பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. இந்த விடயங்களில் அரசாங்கம் தானே முன்வந்து ஜெனிவாவில் வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற கடுமையான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளைக் காரணம் காட்டி வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலை உள்ளது என அரசாங்கம் கூறக்கூடும். ஆனாலும் முழுமையாக ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்ற உறுப்பு நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டேன்." என தெரிவித்தார்.

இதேவேளை, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகப் பிரதிநிதிகளுடம் சுமந்திரன் இரண்டு சந்திப்புகளை மேற்கொண்டுள்ளார். (இ)

## மாட்டியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாவற்குழியைச் சேர்ந்தவர்களான இவர்கள் மூவரும் யாழ். மாவட்டத்தின் பல இடங்களில் இடம்பெற்ற கொள்ளை மற்றும்வழிப்பறிச்சம்பவங்களுடன்தொடர்புடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கைதானோரிடமிருந்து நகைகளை உருக்கிக் கட்டியாக மாற்றப்பட்ட 15 பவுண் தங்கம், 2 மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸார் கைப்பற்றினர். அத்துடன் இந்த நகைகளை உருமாற்றிய நகைக் கடை உரிமையாளர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். விசாரணையின் பின்னர் இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் எனக் கூறப்பட்டது. (இ)

## தெறிக்கிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சி தலைமை மீது பெரும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதனால் சஜித் பிரேமதாஸவை கட்சித் தலைவராகவும் நவீன் திஸாநாயக்கவை உப தலைவராகவும் நியமிக்குமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இருப்பினும் கட்சித் தலைமையை ஏற்க சஜித் பிரேமதாஸ மறுத்து விட்டார். ஆனால் அமைச்சர் தயாசிறி கமகே தன்னை கட்சியின் தலைவராக நியமிக்குமாறும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடத் தயார் என்றும் ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுள்ளார். (ச- இ)

## மகிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளூராட்சித் தேர்தல் முடிவுகளின்படி தற்போதைய அரசாங்கத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது கட்டாயம். எனவே வரும் 18 மாதங்களுக்குள் அரசாங்கம் உரிய முறையில் இதனை அணுக வேண்டும்" என்றும் சொன்னார்.

"ஐக்கிய தேசியக் கட்சி அதன் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் செப்ரெம்பர், அடுத்த வருடம் ஏப்ரலில் நடக்கும் மாகாண சபைத் தேர்தல்களில் தோல்வியையே சந்திக்கும். இதனால் 2020 இல் ஆட்சி என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கனவு வெறும் கனவாகவே இருக்கும்." என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## மோதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயம் எதுவுமில்லாமல் இரகசிய வாக்கெடுப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்க வேண்டும். இதன் மூலம் யாருக்குப் பெரும்பான்மை இருக்கிறது என்பதைத் தெளிவாக அறிய முடியும். இதற்கும் மேலாக அவர்களின் கட்சியினரே அவர்களுக்கு வாக்களித்ததா இல்லையா என்பது பற்றியும் தெரியவரக் கூடும்.

ஆனால் பயத்தில் இரகசிய வாக்கெடுப்புக்கு இணங்காமல் கூட்டமைப்பின் முடிவை மீறி அல்லது மாறி வாக்களித்தால் உடனடியாக பதவியில் இருந்து நீக்கப்படுவார்கள் என மிரட்டி - பயப்படுத்தி பயங்கரவாதத்தை தங்களுடைய வேட்பாளர்களுக்கு எதிராக திரித்து தான் இன்றைக்கு அந்த வேட்பாளர்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க கூடிய நிலை இருக்கிறது.

ஆகவே தான் கேட்கிறோம் ஏன் பயம? உண்மையில் சுதந்திரமாக தங்கள் விருப்பை தெரிவிக்க விருப்பம் என்றால் நீங்கள் ஒரு இரகசிய வாக்கெடுப்புக்கு இணங்குங்கள். அவ்வாறு இணங்கினால் யார் ஆட்சிமைப்பது என்று பார்ப்போம் - என்றார். (ச)

# மோடி சொல்லியே இணைந்தேன்

## ஒப்புக்கொண்டார் ஓபிஎஸ்



சென்னை, பெப்.18

பிரதமர் மோடி கூறியதால்தான், அதிமுகவின் இரு அணிகளை இணைக்க ஒப்புக்கொண்டதாக, தமிழகத் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு சசிகலா முதலமைச்சராக வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததால், ஓபிஎஸ் பதவி விலக நேரிட்டது. ஓபிஎஸ் தர்மயுத்தம் நடத்தி தனியாகப் பிரிந்தார். சசிகலாவுக்கு சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டார்.

அதிமுக ஓபிஎஸ், ஈபிஎஸ் என இரண்டு அணிகளாகப் பிரிந்தது. ஈபிஎஸ் அணிக்கு டிடிவி தினகரன் துணைப்பொதுச்செயலாளர் ஆக்கப்பட்டார். பின்னர் டிடிவி தினகரனை நீக்கியதாக தெரிவித்தனர். அதிமுகவினர் ஓபிஎஸ் வந்தால் வரவேற்போம் என்று பேட்டி அளித்திருந்த நிலையில் திடீரென அதிமுகவின் இரு அணிகளும் இணைந்தன.

அதிமுகவை பின்னிருந்து பாஜக இயக்குவதாகவும் மோடியின் வழிகாட்டுதல்படியே அதிமுக இயங்குவதாக டிடிவி தினகரனும், எதிர்க்கட்சியினரும் குற்றம் சாட்டினர். ஆனால் அதை ஓபிஎஸ், ஈபிஎஸ் தரப்பினர் மறுத்து வந்தனர். இந்நிலையில் உண்மை என்ன என்பதை ஓபிஎஸ் பகிரங்கமாக தெரிவித்திருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேனியில் நடந்த அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது:

"பிரதமர் மோடி அறிவுறுத்தியதாலேயே அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டேன். தர்மயுத்தம் தொடங்கும்போது கூறியது ஒரு சதவிகித தகவல் மட்டுமே, கோபம் வரும் போதெல்லாம் மீதமுள்ள 99 சதவிகித தகவல்களும் வெளிவரும்.

சசிகலா குடும்பத்தினர் கடும் நெருக்கடிகளை அளித்தனர், என் இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால் தற்கொலை செய்துகொண்டிருப்பார்கள், அல்லது ஊரைவிட்டே ஓடியிருப்பார்கள்

நான் தவறான, அநாகரிகமான வேலை செய்து அரசியலுக்கு வரவில்லை. என்னை மீண்டும் டீ ஆற்ற அனுப்பப் போவதாக தினகரன் பேசி வருகிறார். போட்ட துணியோடு ஊருக்குப் போகச் செய்வேன் என சசிகலா கூறுகிறார். இதற்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன்.

கட்சி அணிகள் பிரிந்திருந்த நிலையில் பிரதமர் மோடியிடம் பேசினேன், நான் சென்னை வந்த போது கட்சி குறித்து பல தகவல்களைப் பேசினார், ஆகையால் நான் சொல்கிறேன் நீங்கள் கட்சியில் இணைந்து விடுங்கள் என்று தெரிவித்தார்.

கட்சியில் இணைந்து விடுகிறேன் அமைச்சர் பதவி எல்லாம் வேண்டாம் என்று தெரிவித்தேன். அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார்."இவ்வாறு ஓபிஎஸ் பேசினார். (அ)

## ஒரு லட்சம் குரங்குகள் கொலை



ஜகார்த்தா, பெப்.18

இந்தோனேசியா மற்றும் மலேசியாவின் கட்டுப்பாட்டில் உள்ள போர்னியோ தீவில், ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஒராங்குட்டான் குரங்குகள் கடந்த 1999ஆம் ஆண்டு முதல் கொல்லப்பட்டுள்ளன என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மிகவும் அழியும் அபாயத்தில் உள்ள இந்தக் குரங்கினம் பற்றிய 16 ஆண்டுகால ஆய்வை மேற்கொண்ட அறிவியலாளர்கள் வெளியிட்டுள்ள இந்தத் தகவல் மிகவும் அதிர்ச்சி அடைய வைப்பதாகக் கூறியுள்ளனர்.

மரங்களை வர்த்தகத் தேவைகளுக்காக வெட்டுதல், சுரங்கப் பணிகள் மற்றும் காகிதத் தொழிற்சாலை உள்ளிட்ட காரணங்களால் மேற்கொள்ளப்படும் வன அழிப்பு என்பனவே இந்தக் குரங்குகளின் அழிவுக்கு முக்கியக் காரணமாக உள்ளன.

'வேட்டையாடுதல் மட்டும் பிரச்சினை அல்ல'எனினும், காடுகள் அழிக்கப்படாத பகுதிகளிலும் இந்த குரங்குக்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக அந்த ஆய்வின் முடிவுகள் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



## நாச்சியாருக்கு வசூல்

இயக்குநர் பாலாவின் படங்கள் என்றாலே தனித்துவமாக இருக்கும். வித்தியாசமாக எடுக்கும் அவரா இப்படத்தை இயக்கினார் என்று ஆச்சரியப்படும் அளவுக்கு பாலாவின் நாச்சியார் படத்தை பார்த்தவர்கள் கூறிவருகின்றனர்.

ஜோதிகாவின் மாஸ் நடிப்பு, ஜி.வி. பிரகாஷின் முற்றிலுமான மாறுபட்ட வேடம் என படத்தின் சில விஷயங்கள் ரசிகர்களைக் கவர்ந்திருந்தது. படம் வெளியாகி நல்ல விமர்சனத்தையும் ரசிகர்களிடம் அமோக வரவேற்பையும் பெற்று வருகிறது.

தற்போது இந்தப்படம் முதல் நாள் முடிவில் சென்னையில் மட்டும் 31 லட்சம் இந்திய ரூபா வசூலித்துள்ளது. படத்தின் வரவேற்பை பார்க்கும் போது வரும் நாட்களில் படம் அமோக வசூல் செய்யும் எனக் கூறப்படுகிறது. (அ)

## மெக்ஸிகோவில் நிலநடுக்கம்

மெக்ஸிக்கோ, பெப்.18

தென் மேற்கு மெக்ஸிகோவில் வஹாக்கா மாநிலத்தில் ஒயாசகா நகரத்துக்கு அருகில் 7.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் மெக்ஸிகோவில் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

இந்த நிலநடுக்கத்தின் மையம் வஹாக்கா மாநிலத்தின் பினோடெபா டிடென் லுஸ் நகருக்கு அருகில் 24.6 கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்தது என்று அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் கூறியுள்ளது.

வஹாக்கா மாநிலத்தில் சில கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.
உயிரிழப்புகள் ஏற்பட்டதாக இதுவரை தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

வெள்ளிக்கிழமையன்று இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட பின்னர், மெக்ஸிகோ நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் கட்டடங்களைவிட்டு வெளியேறுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

மெக்ஸிகோ நகரம் உள்பட 5 மாநிலங்களில் நிலநடுக்க எச்சரிக்கை அமைப்பை ஏற்படுத்தியுள்ள அதிகாரிகள், குடியிருப்புவாசிகள் திறந்தவெளியில் இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)



## கோவை தேசிங்கு மரணம்



சென்னை, பெப்.18

வாணி ராணி உள்ளிட்ட பல சீரியல்களிலும், சில திரைப்படங்களிலும் நடித்துள்ள கோவை தேசிங்கு நேற்று முன்தினம் காலமானார்.

சபரிமலையில் உள்ள சரங்குத்தி என்னுமிடத்தில் தங்கியிருந்தபோது, இவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் முன்பே அவரது உயிர் பிரிந்தது.

அவரது மறைவுக்கு சின்னத் திரையில் உள்ள பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். (அ)

## பயணம்..பயணம்..பயணம்!



சூரிச்,பெப்.18


சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த தம்பதியர், தனது மகன் ஒலிம்பிக்கில் விளையாடுவதை பார்க்க, 17,000 கிலோமீற்றர் தூரம் சைக்கிளில் பயணம் செய்துள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென் கொரியாவில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 92 நாடுகளைச் சேர்ந்த சுமார் 3,000 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

சுவிற்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த மிஷா எனும் பனிச்சறுக்கு வீரரும், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றுள்ளார். இந்நிலையில் மிஷாவின் பெற்றோர், தங்களது மகன் பங்கேற்கும் போட்டியைக் காண தென் கொரியாவுக்கு வித்தியாசமான முறையில், சைக்கிளில் செல்ல முடிவு செய்தனர்.

அதன்படி, கடந்த ஆண்டு பெப்ரவரி மாதமே தங்கள் நாட்டில் இருந்து பயணத்தைத் தொடங்கியுள்ளனர். சுமார் 20 நாடுகளைத் தங்களின் பயணத்தில் கடந்த இவர்கள், 17 ஆயிரம் கிலோ மீற்றர்கள் பயணம் செய்து, தற்போது தென் கொரியாவை அடைந்துள்ளனர். (அ)

## கமரூனுக்கே இந்தக் கதியா?






லண்டன், பெப்.18

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூனுடையதைப் போன்ற சாரதி அடையாள அட்டையை அச்சடித்துள்ள கும்பல் சிக்கியுள்ளது.

பிரித்தானியாவின் சீஸ்ஹண்ட் பகுதியில் உள்ள போலி ஆவணங்களைத் தயாரிக்கும் இடத்தை அதிகாரிகள் சோதனையிட்டபோதே, டேவிட் கமரூனினுடையதைப் போன்ற போலிச் சாரதி அடையாள அட்டை அச்சடித்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனை இவர்கள் இணையத்தில் பிரசுரித்து, இது போன்று எங்களால் எதையும் போலியாக செய்து தர முடியும் என்று விளம்பரமும் செய்துள்ளனர்.

இந்தப் போலிச் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி அதைப் பெற்ற நபர்கள் பல மில்லியன் பவுண்டஸ் கணக்கில் மோசடி செய்திருக்கலாம் எனவும், இதன் மூலம் இந்தக் கும்பலுக்கு 1 மில்லியன் பவுண்ட்ஸூக்கும் மேலாகப் பணம் கிடைத்திருக்கலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)



# நானாக இருக்க விரும்புகிறேன்

கேப்டவுன், பெப்.18

"முடிந்தவரை கடினமாக உழைத்து அணிக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கவேண்டும் என்ற மனநிலையில் தான் நான் இருக்க விரும்புகிறேன் " என விராட் கோஹ்லி கூறியிருக்கிறார்.

நடந்த முடிந்த தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில், 3 சதங்களுடன் 558 ரன்களை குவித்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லி.

"இப்போதுள்ள நிலையில் நான் யாருடனும் போட்டிபோட விரும்பவில்லை. ஒவ்வோர் ஆட்டத்துக்கு முன்பும் நான் எப்படித் தயாராகிறேன், எனது நெறிமுறைகள் என்ன, அந்த குறிப்பிட்ட நாளில் நான் எப்படி உணர்கிறேன் என்பதே முக்கியம். நல்ல மனநிலையில் இருக்கவேண்டும் என்பதே எனது நோக்கமாக இருக்கும்.

யாரையாவது முந்தவேண்டும் என்ற எண்ண ஓட்டத்தில் இருந்தால் அது ஆட்டம் ஆடும்போதே தெரிந்துவிடும். அணிக்கான பங்கையும் நீங்கள் விட்டுத் தருகிறீர்கள் என்று அர்த்தம்.

எனக்கு எந்தப் பட்டமும் தேவையில்லை. எந்தத் தலைப்புச்செய்தியிலும் இடம்பெறத் தேவையில்லை. களத்தில் சென்று என் வேலையை செய்கிறேன். எந்தப் பட்டம் வைத்தும் என்னை அழைக்க வேண்டாம். இது எனது வேலை. என் கடமையை நான் செய்ய வேண்டும். நான் யாருக்கும் தயவு காட்டவில்லை. முடிந்தவரை கடினமாக உழைத்து அணிக்கு சிறந்த பங்களிப்பைத் தரவேண்டும் என்ற மனநிலையில் தான் நான் இருக்க விரும்புகிறேன்"என்றும் அவர் கூறினார். (அ)

# இப்படியும் ஒரு ஆட்டமிழப்பு



வெலிங்டன், பெப்.18

அவுஸ்ரேலியா அணிக்கு எதிரான ரி-20 போட்டியில் நியூஸிலாந்து வீரரின் ஹெல்மட் ஸ்டம்பின் மீது விழுந்ததால், பரிதாபமாக ஆட்டமிழந்தார்.

அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முத்தரப்பு ரி-20 தொடர் நியூஸிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் அவுஸ்ரேலியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடந்த போட்டியில் நியூசிலாந்து நிர்ணயித்த 243 ஓட்டங்களை இலகுவாக துரத்தி அவுஸ்ரேலியா அணி வரலாற்றுச் சாதனை படைத்தது. இந்தப் போட்டியில், நியூஸிலாந்து வீரரின் ஹெல்மட் ஸ்டம்பின் மீது விழுந்த ஆட்டமிழந்த நிகழ்வும் நடந்துள்ளது.

அவுஸ்ரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளரான பில்லி ஸ்டேன்கல் வீசிய 18 ஆவது ஓவரை எதிர்கொண்ட நியூஸிலாந்து வீரர் மார்க் சேம்பான், அதை அடித்து ஆட முற்பட்டார். ஆனால் பந்து அவரது ஹெல்மட்டைப் பதம் பார்த்தது.

அந்த ஹெல்மட்டோ பந்து தாக்கிய வேகத்தில் அவரது தலையில் இருந்து கீழே இருந்த ஸ்டம்பின் மீது விழுந்தது. இதைக்கண்ட அவர் துடுப்பை வைத்து தடுக்க முற்பட்ட போதும், அது முடியாமல் போனதால் 'ஹிட் விக்கெட்' முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றத்துடன் வெளியேறினார். (அ)

## தென்னாபிரிக்கா- இந்தியா
# முதல் ரி-20 இன்று


ஜோகனஸ்பெர்க், பெப்.18

தென்னாபிரிக்கா அணியை ஒருநாள் தொடரில் புரட்டி எடுத்த இந்திய அணி, அடுத்ததாக ஜோகனஸ்பெர்க் நகரில் இன்று தொடங்கும் ரி-20 தொடரிலும் முத்திரை பதிக்குமா அல்லது தென்னாபிரிக்கா பழி தீர்க்குமா என்ற ஆவல் எழுந்துள்ளது.

ரி-20 தொடரில் சுரேஷ் ரெய்னா, தினேஷ் கார்த்திக், உனட் கத், மணீஷ் பாண்டே ஆகியோரின் வருகை இந்திய அணிக்கு மேலும் வலுச் சேர்க்கும்.

தென்னபிரிக்காவில் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி டெஸ்ட், ஒருநாள்,ரி-20 தொடரில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் இழந்தாலும், ஒருநாள் தொடரை 5-1 என்ற கணக்கில் கைப்பற்றி வரலாறு படைத்தது. தென்னாபிரிக்க மண்ணில் முதல் முறையாகத் தொடரையும் வென்றது.

இந்நிலையில், 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் இன்று ஜோகனஸ்பெர்க் நகரில் தொடங்குகிறது.இந்த நிலையில்,ஒருநாள் தொடரில் வாங்கிய அடிக்கு ரி-20 தொடரில் தென்னாபிரிக்க அணி பதிலடி கொடுக்கும் என நம்பப்படுகின்றது. இதனால் இன்றைய போட்டி பெரும் விறுவிறுப்பாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.(அ)




# அசேல 'அவுட்'

டாக்கா, பெப்.18

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு எதிராக இரண்டாவது ரி-20 போட்டியிலும் இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரர் அசேல குணரத்ன பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களத்தடுப்பிற்கான பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த அசேல குணரத்ன பாயும்பொழுது, அவரது வலது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. இதனால் அவர் முதலாவது ரி-20 போட்டியில் அவர் பங்கேற்கவில்லை. எனினும் இரண்டாவது போட்டியில் விளையாடுவார் எனக் கூறப்பட்டது. ஆயினும் காயத்தின் நிலைமை மோசமடைந்துள்ளமையினால் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியிலும் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெடரர் முதலிடம்



நெதர்லாந்து, பெப்.18

சுவிட்ஸர்லாந்தின் பிரபல டென்னிஸ் வீரரான ரோஜர் பெடரர், அதிக வயதில் தரவரிசையில் முதலிடம் பிடித்த வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் ரோட்டர்டாம் பகிரங்க டென்னிஸ் தொடரின் அரையிறுதியில், சுவிஸ் வீரர் ரோஜர் பெடரர் நுழைந்துள்ளார்.

இதன்மூலம் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பிடித்தார். இந்நிலையில், அதிக வயதில் தரவரிசையில் முதலிடம் பிடித்த வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

தற்போது 36 வயதாகும் பெடரர், இதற்கு முன்பு கடந்த 2003ஆம் ஆண்டு, 33 ஆவது வயதில் உலகின் முதல் நிலை வீரராக இருந்த அமெரிக்காவின் ஆண்ட்ரே அகசியின் சாதனையை முறியடித்துள்ளார். (அ)






இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 18.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.